# முதலாம் தவணை பரீட்சை-2020
## வரலாறு

| | |
|---|---|
| **ஆசிரியர் ச.கிருஸ்ணபிரபு**<br>**பது/ஊவாஹைலண்ட்ஸ் த.ம.வி**<br>**பண்டாரவளை** | **தரம்**<br>**08** |

மாணவர் பெயர்:…………………… நேரம்: 02 மணித்தியாலம்

### பகுதி 1

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. ஆயிரம் குளங்களை அமைத்ததாக மகாவம்சம் குறிப்பிடும் மன்னன்
   1.தாதுசேனன் 2.வசபன் 3.மகாசேனன் 4.பண்டுகாபயன்

2. ஜல்லுரவாவி என அழைக்கப்படும் குளத்தின் தற்போதைய பெயர்
   1.கலாவாவி 2.அபயவாவி 3.மின்னேரிய குளம் 4.ஹீருளுவாவி

3. பின்வருவனவற்றுள் குளத்தின் அணைகட்டைப் பாதுகாக்கும் குளத்தின் கூறு
   1.அலைதாங்கி 2.கலிங்கல் 3.மதகு 4.வான் கதவு

4. இலங்கையில் முதலாவது நந்த வனத்தை அமைத்த மன்னன்
   1.தேவநம்பிய தீசன் 2.மூத்த சீவன் 3.வசபன் 4.1ஆம் காசியப்பன்

5. இரும்பு கைதொழிலை மேற்கொள்வோர் எவ்வாறு அழைக்கப்படுவர்
   1.கபர 2.தோபஷ 3.மணிகர 4.தம்பர

6. நிரல் 1 உடன் நிரல் 2ஐ இனைக்கும் போது வரும் சரியான விடை

| நிரல் 01 | நிரல் 02 |
|---|---|
| 1.மிரிசு வெட்டிய | A.வலகம்பா |
| 2.தெதிகம கொடவெஹர | B. தேவநம்பிய தீசன |
| 3.அபயகிரி | C.துட்டகைமுனு |
| 4.தூபாராம | D.மகாபராக்கிரமபாகு |

   1.CADB 2.CDAB 3.DCAB 4.ACBD

ச.கிருஸ்ணா...
Education
கல்வி
அධ්‍යාපන



kalvi.lk

7. புராதன காகலத்தில் இரும்பை உருக்குவதற்கான சூலை பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் இடங்களில் ஒன்று

1.தம்புள்ளை 2.சேருவில 3.யட்டிகல்பொத 4.சமனலவெவ

8. 1 ஆம் இராஜசிங்கன் கண்டியை ஆக்கிரமித்த போது தப்பியோடி போர்த்துகேயரிடம் தஞ்சமடைந்த மலையக மன்னன்

1.ஜயவீர பண்டாரன் 2.1ஆம் விமலதர்மசூரியன்

3.கரலியத்த பண்டார 4.செனரத்

9. புராதன கால மருத்துவ உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்ட இடம்

1.ஆலாஹனா பிரிவெனா 2.திக்சந்த பிரிவெனா

3.கம்பளை 4.சீகிரியா

10. நாயக்க வம்சத்தின் முதலாவது ஆட்சியாளன்

1.1ஆம் இராஜசிங்கன் 2.2 ஆம் இராஜசிங்கன்

3.ஸ்ரீ விஜய இராஜசிங்கன் 4.ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

**சரி பிழை கூறுக.**

11. மின்னேரிய வாவியின் அணைக்கட்டின் உயரம் 44 அடியாகும் ( )

12. இலங்கையின் புராதன நீர்பாசனம் எனும் நூல் H.C.B.பெல்லால் எழுதப்பட்டது ( )

13. செங்கல் உற்பத்திக்கு வனைதற்சில்லு எனும் கருவி பயன்படுத்தப்பட்டது ( )

14. சீயம் நிக்காய கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது ( )

15. மஹா ஆஸ்தான குமாரன் என 2 ஆம் இராஜசிங்கன் சிறுவயதில் அழைக்கப்பட்டான் ( )


kalvi.lk

**இடைவெளி நிரப்புக.**

16. யோதஎல**………………………………**மன்னனால் நிர்மானிக்கப்பட்டது.

17. புராதன காலத்தில் ஓடுகளை உற்பத்தி செய்வோர்**……………………………**என்ப்படுவர்.

18. போதிசத்துவர் சிலையை**……………………………**எனும் இடத்தில் காணலாம்.

19. **……………………………**மன்னன் வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரிடம் பௌத்த சமயத்தை கற்றுகொண்டான்

20. 1762 இல்**……………………..**எனும் ஆங்கிலேய தூதுவன் இலங்கைக்கு வருகை தந்தான்.

| புதுருவாகல / ஓட்டுதச்சர் / தாதுசேனன் / ஜோன் பைபஸ் / கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் |
|---|

ச.கிருஷ்ணா…
Education கல்வி அධ்‍யාපන

## பகுதி 11

**முதலாம் வினா உட்பட எல்லாமாக 05 வினாக்களுக்கு விடை தருக?**

### வினா இல 01

A

1. தென்னாசியாவில் மிகவும் பழைமை வாய்ந்த நீர்பூங்கா எது?
2. ருவன்வெளிசாயவை நிர்மாணித்த மன்னன் யார்?
3. வெள்ளரசு மரத்தின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட கட்டடம் எது?
4. முதலாம் விமலதர்ம சூரிய மன்னனின் இளமை பெயர் யாது?




kalvi.lk

B



1. இப்படத்தில் காட்டப்படும் குளம் யாது?
2. அதன் புராதன பெயர் என்ன?
3. இதனை கட்டிய மன்னன் யார்?
4. இது எங்கு காணப்படுகிறது?

C




1. இப்படத்தில் காட்டப்படுவது என்ன?
2. இது எங்கு காணப்படுகிறது?
3. இது எம்மதத்தவருடைய வழிபாட்டு தளம் ஆகும்?
4. இது எம்மரபை பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது?

D



1. படத்தில் காட்டப்படும் உருவின் பெயரை எழுதுக?
2. இதனை உலகரிய செய்த 02 ஆய்வாளர்களையும் குறிப்பிடுக?
3. இது எங்கு காணப்படுகிறது?
4. இதன் சிறப்பம்சங்கள் 03 தருக?



kalvi.lk

### வினா இல 02

1. அநுராதபுர காலத்தில் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட சிறிய குளங்கள் 03 தருக?
2. பெரும் குளங்களை நிர்மானித்த மன்னர்கள் 04 பேரை தருக?
3. பெரும் குளங்களை நிர்மானித்தமையால் புராதன மக்கள் அடைந்த நன்மைகள் 03 தருக?

### வினா இல 03

1. குளமொன்றின் பின்வரும் கூறுகளின் தொழிற்பாடுகளை தருக?
   - ✓ ஈரக்கலிங்கல்
   - ✓ வெளிவான் கதவு
   - ✓ உள்வான்கதவு
   - ✓ அலைதாங்கி
2. புராதன இலங்கையில் நிர்மானிக்கப்பட்ட இருவகையான அணைகட்டுகளையும் குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக?
3. பின்வரும் கால்வாய்களை அமைத்த மன்னர்களை பெயரிடுக.
   - ✓ ஆலிசாராக் கால்வாய்
   - ✓ யோதஎல கால்வாய்
   - ✓ தல்வத்து கால்வாய்
   - ✓ மினிப்பே கால்வாய்

Education கல்வி அධ්‍යාපන
ச.கிருஷ்ணா...

### வினா இல 04

1. பின்வரும் பூங்காக்களை அமைத்த மன்னர்களை தருக.
   - ✓ மகாமேகவனம்
   - ✓ பத்மஸ்வர பூங்கா
2. கால்வாய்களை அமைக்கும் போது புராதன இலங்கையர் எதிர்நோக்கும் சவால்கள் 02 தருக?
3. பொய்கைகள் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் 04 தருக?



kalvi.lk

**வினா இல 05**

1. அநுராதபுரத்தில் அதிகளவு செங்கற்களை கொண்டு அமைக்கப்பட்ட கட்டடங்கள் 02 தருக.
2. அநுராதபுர சமய சார்புடைய கட்டடங்கள் 04 தருக?
3. சிலைமனைகள் அமைக்கும் போது பின்பற்றப்பட்ட மரபுகள் மூன்றையும் அம்மரபில் அமைக்கப்பட்ட சிலைமனைகளுக்கு உதாரணம் ஒவ்வொன்று வீதமும் தருக

**வினா இல 06**

1. பொலன்னறுவை கால சிலைகளில் இந்து கோட்பாடுகளுக்கு அமைய நிர்மானிக்கப்பட்ட சிலைகள் 02 தருக?
2. அநுராதபுர கால சந்திரவட்டகல்லில் காணப்படும் மிருககங்கள் 04 தருக.
3. புத்தர் சிலையின் 03 நிலைகளையும் குறிப்பிட்டு அந்நிலைகளுக்குரிய சிலைகளுகளுக்கான உதாரணம் ஒவ்வொன்று வீதம் தருக?

**வினா இல 07**

1. நீர் பூங்காவின் சிறப்பான அம்சங்கள் 03 தருக.?
2. பின்வரும் தூபிகளை அமைத்த மன்னர்களை தருக?
   - ✓ தூபாராம
   - ✓ அபயகிரி
   - ✓ தெமள மகாசாய
   - ✓ ரன்கொத் விகாரை
   - ✓ மிரிச வெட்டி
3. போதிமனை என்பதனை சுருக்கமாக விளக்குக?

ச.கிருஷ்ணா...
Education கல்வி அධ්‍යාපන

**எண்ணம் போல் வாழ்க்கை**

**எண்ணம் போல் தான் வாழ்க்கை**

**ச.கிருஸ்ணபிரபு...**



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457